**லங்கா ஹொஸ்பிட்டல் டயக்நொஸ்ரிக்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் - 2023**

----------------------------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

லங்கா ஹொஸ்பிட்டல் டயக்நொஸ்ரிக்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்டின் (''கம்பனி'') 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

கம்பனியின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்குளசாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,
- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,
- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்
- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 பெறவேண்டிய கணக்குகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வியாபார கடன்பட்டோர் மீதி ரூபா. 678,584,868 ஆகவும், 2023 திசெம்பர் 31 உள்ளவாறான வியாபார கடன்பட்டோர் மீதான மதிப்பழப்பு ரூபா.27,545,421 ஆகவும் இருந்தது. வைத்தியசாலையின் கடன் சேகரிப்பு காலம் 30 நாட்களாக இருப்பதன் காரணமாக, 60 நாட்களைத் விஞ்சிய பெறவேண்டியவைகளின் பெறுமதி ரூபா.19, 964,254 ஆகும். | இந்த நிலுவைகளில் இருந்து ஏற்படக்கூடிய மதிப்பழப்பினை ஈடு செய்வதற்கு போதுமான ஏற்பாடொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. | கடன் காலப்பகுதிக்குள் உரிய தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 2023 ஆம் ஆண்டில் ரூபா. 5,024.446 பெறுமதியான கடன் பட்டோர் மீதிகள் பதிவழிப்பு செய்யப்பட்டன. பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன. | | |
| (i) | ஆய்வுகூட சோதனைகளுக்காக இரண்டு வாடிக்கையாளர்களிடமிருந்து பெற வேண்டிய ரூபா. 1,634,000 பதிவழிப்பு செய்யப்பட்டது மற்றும் சட்ட நடவடிக்கைக்கான துணை ஆவணம் இல்லாமையினாலும் உரிய தொகையை பதிவழிப்பு செய்தமையினாலும் இது ஏற்பட்டிருந்தது. | 2021/22 கோவிட் காலப்பகுதியில் அதிக அளவான PCR கையாளப்பட்டமை காரணமாக பின்வரும் கார்ப்பரேட் வாடிக்கையாளர்களால் வழங்கப்பட்ட சில கட்டண உத்தரவாதங்கள் இரண்டு | கடன் பட்டோரிடமிருந்தான நிலுவைத் தொகைகள் தொடர்பான பதிவேடுகள் மற்றும் ஆவணங்களை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | முனைகளிலிருந்தும் கண்டறிய முடியாததாக உள்ளன. துணை ஆவணங்களை கண்டுபிடிப்பதற்கான அனைத்து முயற்சிகளும் தோல்வியடைந்த பின்னர், நிலுவை மீதியினை பதிவழிப்பு செய்வதற்கு தீர்மானம் மெற்கொள்ளப்பட்டது. | |
| (ii) | 2023 திசெம்பர் 31 இன் உள்ளவாறான இரண்டு கார்ப்பரேட் வாடடிக்கையாளர்களின் அறவிட முடியா கடன் ஏற்பாட்டு நிலுவை மீதி ரூ.1,114,690 ஆகும். கோவிட் காலப்பகுதியின் போது, கார்ப்பரேட் வாடிக்கையாளருக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவு உத்தரவாதங்கள் கண்டறிய முடியாததாக உள்ளன மற்றும் நிலுவைத் தொகை பதிவழிப்பு செய்யப்பட்டுள்ளது. ஆவணச் சான்றுகள் இல்லாமையே இதற்கு காரணம் என்று கண்டறியப்பட்டுள்ளது. | 2021 கோவிட் காலப்பகுதியின் போது அதிக அளவான PCR கையாளப்பட்டமை காரணமாக பின்வரும் கார்ப்பரேட் வாடிக்கையாளர்களால் வழங்கப்பட்ட சில கட்டண உத்தரவாதங்கள் இரண்டு முனைகளிலிருந்தும் கண்டறிய முடியாததாக உள்ளன. துணை ஆவணங்களை கண்டுபிடிப்பதற்கான அனைத்து முயற்சிகளும் தோல்வியடைந்த பின்னர், நிலுவை மீதியினை பதிவழிப்பு செய்வதற்கு தீர்மானம் மெற்கொள்ளப்பட்டது. | கடன் பட்டோரிடமிருந்தான நிலுவைத் தொகைகள் தொடர்பான பதிவேடுகள் மற்றும் ஆவணங்களை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (iii) | கோவிட் 19 சிகிச்சைக்காக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளுக்காக வெளிநாட்டு நிறுவனம் ஒன்றிடமிருந்தான நிலுவையான 365 நாட்களுக்கும் மேற்பட்ட நிலுவை தொகையான ரூபா.12,780,950 தொனையினை மருத்துவமனை கட்டுப்பாட்டிற்கு அப்பால் இருந்தமை காரணமாக மீள அறவீடுசெய்ய முடியவில்லை என்று கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.<br>ஒரு வருடத்திற்கும் மேலாக கடன்பட்டோர் மீதி காணப்படுவதுடன் மற்றும் ரூபா.3,581,382 தொகையினை மாத்திரம் அறவீடு செய்வதற்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | 2024 ஆம் ஆண்டு தீர்ப்பனவு செய்யப்படாத ரூபா.12.7 மில்லியன் மொத்தத் தொகைக்கு எதிராக China Harbour Engineering Ltd மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது. 2023 திசெம்பரில் உள்ளவாறு ரூபா.3.5 மில்லியன் தொகையினை செலுத்தத் தவறியமைக்காக பின்வரும் நிறுவனங்களுக்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது. | வைத்தியசாலை பட்டியல் நிலவை தொகையினை அறவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 346,020,064 இலாபமொன்றாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 609,460,389 ஆக காணப்பட்டதால் நிதி விளைவுகளில் ரூபா 263,440,325 தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. சேவைகளின் கிரயம் ரூபா. 117,402,192 தொகையினால் அதிகரித்திருந்தமை மற்றும் வருமானம் ரூபா 18,735,295 ஆல் குறைவடைந்தமையே இவ் வீச்சிக்கான முக்கிய காரணமாகும்.

### 2.2 வருமானத்தின் போக்குப் பகுப்பாய்வு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் Lanka Hospital Diagnostic Ltd இன் செயற்பாட்டு இலாபம் குறைந்து ரூபா.263,440,325 தொகையாக 43% ஆல் குறைவடைந்துள்ளது. ஆனால் நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா. 484,116,545 ஆல் அதிகரித்ததன் காரணமாக வரிக்குப் பின் இலாபம் ரூபா.15,956,956 ஆக 2.73 மட்டுமே குறைவடைந்துள்ளது. இது செயற்பாட்டு வருமானத்தின் ஒரு பகுதி இல்லை. | கோவிட் வணிகத்தை விட முக்கிய வணிக இலாப எல்லையானது ஒப்பீட்டளவில் குறைவாக இருப்பதன் காரணமாக, வரிக்குப் பின் இலாபத்தின் (PAT) குறைவு முக்கியமாக மொத்த இலாப (GP) எல்லை குறைவடைந்ததால் ஏற்படுகிறது. | செயற்பாட்டு இலாபம் குறைவடைவதைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதான ஆய்வுகூடத்துடன், தீவு முழுவதும் 6 சிறிய ஆய்வுகூடங்களை லங்கா ஹாஸ்பிடல் நோயறிதல் கம்பனி பராமரிக்கின்றது. மேற்படி ஆய்வுகூடங்களில் உள்ள ஆய்வுக்கூட பரிசோதனை உபகரணங்களில் வைத்தியசாலைக்கு சொந்தமான மொத்தமாக 03 ஆய்வுகூட உபகரணங்கள் காணப்பட்டன. ஏனைய அனைத்து ஆய்வுகூட உபகரணங்களும் 5 வருட காலத்திற்கு வாடகை ஒப்பந்தத்தின் அடிப்படையில் ரீஏஜண்ட் அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டது. ரீஏஜண்ட் அடிப்படையிலான முறையில் ஆய்வுகூட உபகரணங்களைப் பயன்படுத்துவது வைத்தியசாலைக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்குமா என்பதைத் தீர்மானிப்பதற்கு கழிவீட்டு காரணியின் அடிப்படையில் கணக்கிடப்பட்ட நன்மை மதிப்பீடு செய்யப்படவில்லை. | பெறுகை குழு (PC) மூலம் பெறுகை செயல்முறையினை ஆரம்பிப்பதற்கு முன்னர் நிதி ரீதியான மதிப்பீட்டைச் மேற்கொள்ளுவது எமது நியமமான செயல்முறையாகும். உதாரணமாக 2023 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டை நாம் இணைத்துள்ளோம். | ஆய்வுகூட உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு கிரய-நன்மை பகுப்பாய்வொன்றினை மேற்கொள்ளுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கம்பனிக்கு சொந்தமான கம்பனியினால் இயக்கப்படும் (COCO) 38 எண்ணிக்கையான மாதிரி சேகரிப்பு நிலையங்கள் 2023 திசெம்பர் 31 இல் காணப்பட்டன அவற்றின் மொத்த வருமானம் ரூபா. 562 மில்லியன் ஆகும். மூன்றாம் தரப்பினருக்குச் சொந்தமான 983 பதிவு செய்யப்பட்ட நிலையங்கள் இருந்தபோதிலும், செயற்பாட்டில் உள்ள நிலையங்களின் எண்ணிக்கை 445 ஆகும். பல மூன்றாம் தரப்பு மாதிரி சேகரிப்பு நிலையங்கள் எப்போதாவது மாதிரிகளை ஆய்வுகூட பரிசோதனைக்கு அனுப்புவதை அவதானிக்க முடிந்தது. எவ்வாறாயினும் மூன்றாம் தரப்பிலுள்ள 538 நிலையங்கள் செயற்பாட்டில் இல்லை. மீளாய்வாண்டில் மொத்த விற்பனை வருமானம் ரூபா. 1950 மில்லியன் ஆகும இதற்கு முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா.26 மில்லியனால் குறைவடைந்துள்ளது. | கம்பனிக்கு சொந்தமான கம்பனியினால் இயக்கப்படும் (COCO) க்கள் மற்றும் சிறிய ஆய்வுகூடங்கள் மூலம் உருவாக்கப்பட்ட கோவிட் விற்பனையில் ஏற்பட்ட குறைவின் காரணமாக வெளிப்புற விற்பனை வீழ்ச்சியொன்று ஏற்பட்டது. | விற்பனை சரிவினை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | 2023 ஆம் ஆண்டிற்கான 82 COCO களின் உண்மையான வருமானம் ரூபா.561,614,488 மற்றும் மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா.641,077,714 ஆகியவற்றைக் கருத்தில் கொள்ளும் போது, 12 மாதங்களில் 11 மாதங்கள் தமது இலக்கினை அடையவில்லை என்பது கண்டறியப்பட்டது. இதன் பிரகாரம், மதிப்பிடப்பட்ட வருமானத்துடன் ஒப்பிடுகையில் உண்மையான வருமானம் 12.4 சதவீதத்தினால் அல்லது ரூபா.79,463,226 தொகையினால் குறைந்துள்ளது என்று அவதானிக்கப்பட்டது. | 2023 ஆம் ஆண்டில் 60 COCO களில் இருந்து பெறப்பட்ட மொத்த நிகர வருமானம் ரூபா. 519 மில்லியன் மற்றும் அதே காலப்பகுதிக்கான பாதீட்டு வருமானம் ரூபா. 528 மில்லியன் ஆகும். அதன் பிரகாரம், COCO களில் இருந்து குறைான கோவிட் விற்பனையின் காரணமாக ஆண்டுக்கு ஆண்டு (YOY) வீழ்ச்சி 2% ஆகும். | அடையக்கூடிய இலக்குகள் நிர்ணயிக்கப்படல் வேண்டும். |